# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

09.08.2020 ஞாயிற்றுக்கிழமை


## புதினம் தெரியுமோ?

தேர்தலொண்டு வந்ததுதான் வந்திச்சு, அசைக்கவே முடியாது எண்டிருந்த கட்சிகள் கூட ஈடாடத் தொடங்கிட்டு. அதிலையும் கூட்டமைப்பு படுகிறபாடு கொஞ்ச நஞ்சமில்லை. கூட்டமைப்புக்கு ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆச னம் கிடைச்சது. அதை ஆருக்கு குடுக்கிறது எண்டு , ரிசல்ட் வர முதலே ஒரே குத்து வெட்டு. தேர்தல் அறிவிச்ச கையோட, கூட்டமைப்புக்கு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைச்சா அது அம்பிகா வுக்குத்தான் குடுக்க வேணும் எண்டு சுமந்திரன் துண்டு போட்டு இடம் பிடிச்சு வைச்சிருந்தார். ஆனால்

2A

## கலையரசன் நியமனத்தால் தமிழரசு கட்சியில் குழப்பம்!!

யாழ்ப்பாணம், ஓக.9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் கலையரசன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளும் கருத்து முரண் பாடுகள் எழுந்துள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.

தேசியப் பட்டியல் நியமனத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட சசிகலா

2

## கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் கலையரசனுக்கு



கொழும்பு, ஓக.9

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தேசியப் பட்டியல் ஆசன நாடாளுமன்ற உறுப்பினராக நாவிதன்வெளி பிரதேச சபை யின் தவிசாளர் தவராசா கலைய ரசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் துரைராஜ சிங்கம், இன்று ஞாயிற்றுக்கி ழமை நடத்திய ஊடக சந்திப் பில் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டி யல் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பாக இடம்பெற்ற பல சுற்று பேச்சுக்களின் பின்னர் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள் ளது என்றும் அவர் தெரிவித்துள் ளார். இந்தத் தீர்மானம் தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலா

2

## ரயிலுடன் மோதி யானை உயிரிழப்பு

வவுனியா, ஓக.9

வவுனியா, கனகராயன் குளப் பகுதியில் ரயிலு டன் மோதி யானை ஒன்று உயிரிழந்துள் ளது. விபத்துக்குள்ளான ரயில் தடம் புரண்டது. இன்று அதிகாலை கனக ராயன், ஆலங்குளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள் ளது. யாழ்ப்பா

2

## எம்.பிக்களின் பெயர்களுடன் சிறப்பு வர்த்தமானி

கொழும்பு, ஓக.9

நாடாளுமன்றத் தேர்தலில் தெரி வான 196 உறுப்பினர்களின் பெயர் கள் அடங்கிய வர்த்தமானி அறி வித்தல் வெளியிடப்பட்டுள் ளது. 1981ஆம் ஆண்டின் எண்

2



## நான்காவது தடவையாக பிரதமரானார் மஹிந்த!

கொழும்பு, ஓக.9

நாட்டின் 28ஆவது பிரத மராக மஹிந்த ராஜ பக்ச இன்று காலை பதவி யேற்றுக் கொண்டார். நாட் டின் பிரதமராக மஹிந்த ராஜ பக்ச பதவி வகிக்கும் நான்காவது சந்தர்ப் பம் இதுவாகும்.

2

## அமைச்சரவை பதவிப்பிரமாணம் 14ஆம் திகதி

கொழும்பு, ஓக.9

புதிய பாராளுமன்றத்தின் தேசிய பட்டியல் பிரதிநிதிகளது விபரங் கள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு நாளை வெளியி

2

## 'ராஜபக்ச அன்ட் கோ'



கொழும்பு, ஓக.9

இலங்கையின் வரலாற்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் முதல் தடவையாக ஆட்சி அதிகாரத்தில் இடம்பெறவுள்ளனர். ராஜபக்ச குடும் பத்தைச் சேர்ந்தவர்ளே அதிகாரத் துக்கு வரவுள்ளனர்.

2

## 15,000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள்?

கொழும்பு, ஓக.9

எதிர்வரும் மாதங்களில் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங் கப்படும் என்றும், அவர்கள் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிய மிக்கப் படுவர் என்றும் கல்வி அமைச்சை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகி யுள்ளன.

கொரோனாத் தொற்று மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக

2

## அண்ணனை வணங்கி 'வைரலான' கோத்தா!



கொழும்பு, ஓக.9

களனி ரஜமஹா விகாரையில் மஹிந்த ராஜபக்ச இன்று காலை பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் முன்னிலையில் இந்தப்

2

## கலையரசன் நியமனத்தால்...

ரவிராஜ்க்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளும், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்திருந்தன.
கடந்த இரு நாள்களாக இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்திருந்தன. இதனிடையே திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனுக்குத் தேசியப் பட்டியல் நியமனத்தை வழங்க வேண்டும் என்று மாவை சேனாதிராஜாவிடம் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோர் கோரியிருந்தனர் என்ற தகவலும் வெளியாகியிருந்தது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நேற்று இது தொடர்பில் கலந்துரையாடல் திருகோணமலையில் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று காலை தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பான அறிவிப்பு வெளியாகியிருந்தது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமலும், தமிழரசுக் கட்சியினர் பெரும்பான்மையானோரின் விருப்பத்தைப் புறம்தள்ளியும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
இந்த முடிவுகள் எவருடனும் கலந்தாலோசிக்கப்படாது இரண்டொருவரால் எடுக்கப்பட்டுள்ளன என்றும், இவ்வாறான போக்குகளால் தான் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிமானத்தை இழந்திருந்தது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.(எ)

## நான்காவது தடவையாக...

களனி ரஜமஹா விகாரையில் மத சம்பிரதாய அனுஷ்டானங்களை தொடர்ந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் அவர் பதவியேற்றார்.
சர்வதேச நாடுகளின் ராஜதந்திரிகள் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் இந்தப் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்டனர்.
பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ச 5 லட்சத்து 27 ஆயிரத்து 364 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். இலங்கை வரலாற்றில் வேட்பாளர் ஒருவர் பெற்றுக் கொண்ட அதிக விருப்பு வாக்குகள் இதுவாகும்.
பதவியேற்பின் பின்னர், மஹிந்த ராஜபக்ச தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது என் மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய எனக்குக் கிடைத்த வாய்ப்பால் நான் பணிவுடன் இருக்கிறேன். இலங்கையர்கள் எனக்குக் கொடுக்கும் நம்பிக்கை, எனது தேசத்துக்கு தொடர்ந்து சேவை செய்யத் தூண்டுகிறது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனான எங்கள் ஆட்சிக் காலத்தில் இலங்கை முற்போக்கான பயணத்தை மேற்கொள்ளும் என்பதை நான் உறுதி செய்வேன். என்று தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியென அனைத்து பதவிகளையும் வகித்த ஒரேயொரு அரசியல்வாதியாக மஹிந்த ராஜபக்ச கருதப்படுகின்றார்.
டி.எஸ். சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, சேர். ஜோன் கொத்தலாவ, பண்டாரநாயக்க, ஸ்ரீமாவோ, சந்திரிக்கா, ரணில், மஹிந்த உட்பட இலங்கையில் இதுவரையில் 14 பேர் பிரதமர் பதவியை வகித்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பிரதமராக பதவியேற்றுள்ளனர். அதன் அடிப்படையில் கணிப்பிட்டால் மஹிந்த ராஜபக்ச 31ஆவது பிரதமராவார். (ரணில் விக்கிமசிங்க 5 தடவைகள், டட்லி சேனாநாயக்க 4 தடவைகள், மஹிந்த ராஜபக்ச 4 தடவைகள், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 4, ரட்னசிறி விக்கிரமநாயக்க 3, ரணசிங்க பிரேமதாச 02, டி.எஸ். சேனாநாயக்க, சேர். ஜோன் கொத்தலாவ, தஹநாயக்க, ஜே.ஆர். ஜயவர்தன, சந்திரிக்கா, தி.மு. ஜயரத்ன, விஜேதுங்க ஆகியோர் ஒரு தடவை பிரதமர் பதவியை வகித்துள்ளனர். (எ-44)

## ரயிலுடன் மோதி...

ணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலே விபத்தில் சிக்கியது. ரயிலுடன் மோதிய யானை அந்த இடத்திலேயே உயிரிழந்தது.
விபத்துக்குள்ளான ரயில் தண்டவாளத்தில் இருந்து விலகித் தடம்புரண்டது.
பயணிகள் எவருக்கும் விபத்தில் காயம் ஏற்படவில்லை.
விபத்து நடந்த இடத்துக்குச் சென்ற கனகராயன்குளம் பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.
இந்த விபத்தால் பல மணி நேரத் தாமதத்துக்குப் பின்னர் ரயில் தனது பயணத்தைத் தொடர்ந்தது.(எ110,159,18, 6)

## எம்.பிக்களின் பெயர்களுடன்...

1 நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரிவு 62 இன் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களான நலின் அபேயசேகர மற்றும் ரட்ணஜீவன் கூல் ஆகியோரின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (எ)

## கூட்டமைப்பின்...

ளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவுள்ளார். பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்திருந்தது. அதை எவருக்கு வழங்குவது என்பது தொடர்பில் கடந்த இரு நாள்களாகப் பேச்சுக்கள் நடைபெற்று வந்தன. நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலும் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடல் நடந்திருந்தது. (எ)

## அமைச்சரவை...

டப்பட்டால், அமைச்சரவை அமைச்சர்களின் பதவியேற்பு எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்தார்.
புதிய அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்வு கண்டி மகுல் மடுவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. புதிய அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையானது மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அமையப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்களுக்கும் அமைச்சர் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

## 'ராஜபக்ச அன்ட் கோ'...

நாட்டின் ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச பதவி வகிக்கும் நிலையில், பிரதமராக மஹிந்த ராஜபக்ச பதவியேற்றுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து சமல் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர். மொனராகலை மாவட்டத்தில் இருந்து சஷீந்திர ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார். மாத்தறை மாவட்டத்தில் இருந்து நிபுண ரணவக்க நாடாளுமற்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.
சமல் ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் சகோதரர்கள் ஆவர். நமல் ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் புதல்வராவார். நிபுண ரணவக்க பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கடைசித் தங்கையின் மகனாவார். அமையவுள்ள அமைச்சரவையில் இவர்கள் முக்கிய பதவிகளில் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)



## அண்ணனை வணங்கி...

பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது.
சுபநேரம்வருபவரை காத்திருந்து ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச.
அதன்பின்னர் தனது அண்ணானான மஹிந்தவின் பாதங்களில் விழுந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆசி பெற்றார். அது சமூக வலைத்தளங்களில் "வைரல்" ஆகியுள்ளது.
"எவ்வளவு பெரிய பதவி வகித்தாலும், உயர்வின் உச்சம் தொட்டாலும்கூட பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் ஒருபோதும் மறக்கக்கூடாது. இதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவே சான்று.
இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அவர் பதவிவகிக்கின்றார். இவர் முன்னிலையிலேயே பிரதமராக மஹிந்த ராஜபக்ச பதவியேற்றார்.மஹிந்த ராஜபக்ச இரண்டாம்நிலை பதவி வகித்தாலும் கோட்டாபயவின் அண்ணன். எனவே, நிகழ்வின் பின்னர் அண்ணாவின் பாதங்களை தொட்டு தம்பி கோட்டாபய ராஜபக்ச ஆசிபெறும் காட்சி இன்றைய இளம் தலைமுறையினருக்கு சிறந்த பாடம். என பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ)

## 15,000 பட்டதாரிகளுக்கு...

இந்த நியமனங்கள் தாமதமாகியிருந்தன என்றும் தற்போது அவை வழங்கப்படவுள்ளன என்றும், க.பொ.த. சாதாரண தரத்தில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களும் க.பொ.த உயர்தரத்துக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பான விவரங்களை வழங்குமாறு கல்வி அமைச்சு ஏற்கனவே பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்திருந்தது. அவற்றின் அடிப்படையில் சுமார் 5 ஆயிரம் ஆசிரியர்கள் மாகாண பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அதேவேளை, ஆசிரியர்கள் அதிகமாக உள்ள பாடசாலைகளில் இருந்து அவர்களை வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு இடமாற்றுவதன் மூலம் ஆசிரியர்களின் வெற்றிடத்தை ஒழுங்குபடுத்தும் திட்டத்தையும் அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.
மற்றொரு திட்டத்தின் கீழ், ஆயிரம் ஆசிரியர் உதவியாளர்களை நியமிக்கவும் அரசு எதிர்பார்த்துள்ளது. இந்த திட்டத்தில் ஆட்சேர்க்கப்படுவோர், நியமனத்துக்கு முன்பு, ஆசிரியர் மற்றும் கல்வி டிப்ளோமாவை முடிக்க வேண்டும். ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எழுப்பிய பிரச்சினைகள் காரணமாக இந்தத் திட்டம் தாமதமாகியுள்ளது என்று கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)











நாட்டின் 28ஆவது பிரதமராக மஹிந்த ராஜபக்ச இன்று களனி ரஜமஹா விகாரையில் பதவியேற்றபோது...





## புதினம் தெரியுமோ

அம்பிகா கட்சிக்கும் ஒண்டும் செய்யேலை, மக்களுக்கும் ஒண்டும் செய்யேலை, அதால அவாக்கு ஏன் குடுக்க வேனும் எண்டு கட்சிக்காரர் எல்லாரும் குழம்பிட்டினம். எதுக்கும் தேர்தல் முடிய பாப்பம் எண்டு மனசுக்க கறுவிக்கொண்டு இருந்திச்சினம். ஆனா தேர்தல் முடிவுகள் தலைகீழா வர எல்லாரும் கப்சிப்.

சசிகலா, மாவை இரண்டில ஒராளுக்குத்தான் தேசியப்பட்டியல் ஆசனத்தை குடுக்க வேணும் எண்டு கூட்டமைப்பில உள்ள எல்லாரின்ர விருப்பமும். இந்த ரண்டில ஒராளுக்கு குடுத்தால், கட்சிக்கு இப்ப ஏற்பட்ட பின்னடைவைக் கொஞ்சம் சமாளிக்கலாம் எண்டது அவையின்ர கணிப்பு. ஆனால் தன்ர வலக்கையான கனடா இறக்குமதி குகதாசனுக்கு குடுத்தால் உதவியா இருக்குமெண்டது சம்பந்தரின் நினைப்பு. இந்த இருவகையான நினைப்புக்கும் ஆப்பு வைக்கிறமாதிரி, இரவோடிரவா சம்பந்தரின் வீட்டுக்குப் போய், அவரின்ர மண்டையக் கழுவியிருக்கினம் சுமந்திரன், சிறீதரன் கூட்டணி('சூனா சீனா'கூட்டணி ).

ஆருக்கு குடுத்தாலும் பரவாயில்லை, ஆனால் மாவைக்கு குடுக்க வேண்டாம். அவருக்கு செல்வாக்கில்லை. குகதாசனுக்கு குடுத்தால் ,ஏன் மாவைக்கு குடுக்காம குகதாசனுக்கு குடுத்தவை எண்டும் கேள்வி வரும். அதால கிழக்கில ஆருக்கும் குடுக்கலாம் எண்டு இந்த 'சூனா சீனா'கூட்டணி பத்தவைக்க, சம்பந்தரும் தலையாட்டியிருக்கிறார். உடனேயே கட்சிச் செயலாளரைக் கூப்பிட்டு அம்பாறை நாவிதன்வெளி பிரதேச சபையின் தலைவராக இருக்கும் கலையரசனுக்கு தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கும் கடிதத்தில் கையெழுத்தும் வாங்கிவிட்டார். இந்த விடயம் குகதாசனுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டு, கடிதமும் கொடுக்கப்பட்டுவிட்டது என்று கொஞ்சம் திரிபுபட்டு வெளியில் கசிந்தது. உடனேயே பட்சி சம்பந்தருக்கு கோல் எடுத்து நேற்றிரவு கேட்டது. அதுக்கு சம்பந்தர் "இன்னும் ஆருக்கு குடுக்கிறது எண்டு முடிவில்லை. இதெல்லாம் சாதாரண விடயமில்லை. பங்காளிக் கட்சிகளையும், கட்சிக்காரர்களையும் கேட்டு, அவையின்ர அபிப்பிராயங்களின் அடிப்படையில் தான் முடிவெடுக்க வேணும் எண்டு சொல்லிட்டு வைச்சிட்டார். ஆனால் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக்கட்சி, புளொட், ரெலோ எண்ட மூண்டு கட்சித் தலைவர்களுக்கும் தெரியாமல் சூனா சீனா' கூட்டணியின் ஏவலில நடந்துகொண்டிருக்கிறார் சம்பந்தர். கிட்டத்தட்ட கட்சியை இன்னும் உடைக்கிற வேலையை அதன் தலைவரே செய்யிறார். இன்னொரு ஐக்கிய தேசியக் கட்சியாக கூட்டமைப்பும், அடுத்த ரணிலாக சம்பந்தரும் மாறப் போறது மட்டும் உறுதியாகிட்டு.

–பட்சி



# கைக்குண்டு மீட்பு

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரத்தில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. பயன்பாட்டில் இருந்த காணி ஒன்றில் இருந்தே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. மக்கள் கைக்குண்டை இனங்கண்டு பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்தனர்.

கிளிநொச்சி நீதிவான் மன்றில் அனுமதி பெற்றுக் கைக்குண்டைச் செயலிழிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

# தேசியப்பட்டியல் பங்கீடு; கட்சிகளுக்குள் பிடுங்குப்பாடு!

கொழும்பு, ஓக.9

தேசியப் பட்டியல் ஆசனப் பங்கீடு தொடர் பில் இறுதி முடிவெடுக்க முடியாமல் கட்சி களுக்குள் இழுபறி நிலைமை தோன்றியுள்ளது. தேசியப் பட்டியல் ஆசனத்தை இலக்குவைத்து அரசியல் பிரமுகர்கள் அழுத்தங்களைப் பிரயோகிப்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் 27 லட்சத்து 71 ஆயிரத்து 984 வாக்குகளைப்பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு தேசியப் பட்டியல் ஊடாக எழுவரை நியமிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சஜித் அணியுடன் இணைந்து போட்டியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகியன தமது கட்சிகளுக்கு தலா ஒரு தேசியப்பட்டில் வீதம் வேண்டும் என வலியுறுத்தியுள்ளன. மறுபுறத்தில் சஜித்தின் சகாக்களும் தமக்கு வாய்ப்பு வேண்டும் என கோருகின்றனர்.

இதனால் எவ்வாறு எழுவரை தெரிவுசெய்வது, பங்காளிகளுக்கு பங்கிடமுடியுமா என்பது தொடர்பில் சஜித்துக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைத்துள்ள ஒரு தேசியப்பட்டியல் மூலம் யாரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது என்பது தொடர்பில் இன்று அறிவிக்கப்படும் என அந்தக் கட்சியின் உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இதற்காக விசேடகூட்டமொன்று சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது.

அதேவேளை, அத்துரலிய ரத்தன தேரர் தலைமையிலான 'அபே ஜாதிக கட்சி'க்கு கிடைத்துள்ள ஓர் ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பதிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் இன்று இறுதி முடிவு எடுக்கப்படலாம் என நம்பப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியும் தமது தேசியப்பட்டியல் வேட்பாளர் யார் என்பதை இன்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக்கட்சி ஆகியன தேசியப்பட்டியல் உறுப்பினர்களை அறிவித்துவிட்டன. (எ-44)

# பிரதமர் மஹிந்தவுக்கு சீனாவும் வாழ்த்து

கொழும்பு, ஓக.9



பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராகப் பதவி யேற்றுள்ள மஹிந்த ராஜ பக்ஷ மற்றும் அவரது கட்சியான இலங்கை பொதுஜன பெரமுனவுக்கு சீனா தனது வாழ்த்துக்க ளைத் தெரிவித்துள்ளது. மேலும் இரு தரப்பு உறவு களையும் அதிக வளர்ச்சியுடன் உயர்த்துவதற்கான தனது ஆதரவையும் உறுதிப்படுத்தியுள்ளது என இலங்கை பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையில் நேற்றைய தினம் நடை பெற்ற சந்திப்பில் இலங்கைக்கான சீனத் தூத ரக அதிகாரிகள், பிரதமர் மஹிந்த ராஜபக் சவை சந்தித்து இந்த விடயத்தை வெளிப்படுத்தி யுள்ளதுடன், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு வின் வாழ்த்து கடிதத்தையும் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, ஹம்பாந்தோட்டை துறைமுக நக ரத்தின் பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றும், குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒத்துழைப்பது தொடர்பில் பரிசீலிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரி3)

# மீண்டும் சர்வதேச சேவைகளில் மத்தல விமான நிலையம்

கொழும்பு, ஓக.9




மத்தல சர்வதேச விமான நிலையம் நாளை முதல் சர்வதேச விமான சேவை களை முன்னெடுக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. இதன்படி, எமிரேட்ஸ் விமானம் நாளை மத்தல விமான நிலையத்திற்கு வருகை தந்து, அங்கிருந்து அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகளுக்கு சரக்கு ஏற்றி இறக்கும் சேவைகளை முன் னெடுக்கவுள்ளது.

2013 மார்ச் 18 இல் திறக்கப் பட்ட இலங்கையின் இரண் டாவது சர்வதேச விமான நிலையமான மத்தல ராஜபக்ச விமான நிலையம், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் 2 இல் மூடப் பட்டு, கடும் எதிர்ப்புக்க ளுக்கு மத்தியில் விமான நிலைய வளாகக் கட்டடத்தில் நெல் சேமிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுக ளாக செயலற்ற நிலையில் இருந்து வந்த மத்தல சர்வதேச விமான நிலையம், கொரோ னாத் தொற்று காரணமாக மீண்டும் செயற்படத் தொடங் கியது.

இவ்வாண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மட்டும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வெளிநாட்டு விமா னங்கள் உட்பட 70 விமானங் கள் மத்தல விமான நிலையம் ஊடாக சேவைகளை மேற்கொண்டன. இவ் விமான நிலையம் 2,500க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு சேவையை வழங்கியுள்ளது. இந்நிலையிலேயே, மத்தல சர்வதேச விமான நிலை யத்தில் இருந்து நாளை எமிரேட்ஸ் விமானம் மூலம் 28 டன் சரக்கு அமெரிக்கா விற்கு ஏற்றுமதி செய்யப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (ரி3)

# புதிய அமைச்சரவையில் எதிரணி உறுப்பினர்கள் 10 பேர் அரசுடன் இணைவு

கொழும்பு, ஓக.9

பொதுத்தேர்தலில் சமகால அரசு அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் எதிரணியிலிருந்து 10 உறுப்பினர்கள் புதிய அரசுடன் இணைவதற்கு தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நால்வரும், மலையக கட்சி ஒன்றிலிருந்து இருவரும், கிழக்கில் சிறிய கட்சி ஒன்றிலிருந்து இருவரும், வட மத்திய மாகாணத்தில் வெற்றி பெற்ற எதிரணி உறுப்பி னர் ஒருவரும் இவ்வாறு அரசுடன் இணைய வுள்ளதாகத் தெரியவருகிறது. இதேவேளை அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கு வதற்கு எவ்வித வாக்குறுதிகளும் அரசின் சார்பில் வழங்கப்படவில்லை என குறிப்பி டப்படுகின்றது. (ரி2)

ரூபா ஒரு கோடி பெறுமதியான

# இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட மஞ்சள், ஏலக்காய் மீட்பு

கொழும்பு, ஓக.9

சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து இலங் கைக்குக் கொண்டுவரப்பட்ட மஞ்சள் மற்றும் ஏலக்காய் இராணுவத்தினரால் கைப்பற் றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சள் மற்றும் ஏலக்காயின் மொத்தப் பெறுமதி ஏறக்குறைய ஒரு கோடி ரூபா எனவும், இந்தியாவில் இருந்து மீன்பிடிப் படகு மூலமாக இப் பொருள் கள் இலங்கைக்கு கொண்டுவ ரப்பட்டிருக்கலாம் எனவும் இராணுவ புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீன்பிடிப் படகின் உரிமையா ளர் மற்றும் அதில் பயணித்த இரண்டு மீனவர்களைக் கைது செய்துள்ள இராணுவத்தினர், சம்பவம் தொடர்பான விசார ணைகளை மேற்கொள்ள கைது செய்யப்பட்ட நபர்களை கல்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)





# கேரளா விமான விபத்து; பிரதமர் இரங்கல்

கொழும்பு, ஓக.9

இந்தியாவின் கேரளாவில் நேற்றிரவு இடம்பெற்ற விமான விபத்து குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ச இரங்கல் வெளியிட்டுள் ளார்.

'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ் துபாயில் இருந்து 184 பயணிகளு டன் இந்தியா சென்ற எயார் இந்தியா எக்ஸ்பி ரஸ் விமானம், நேற்றுமுன் தினம் இரவு 7.40 மணிக்கு கோழிக்கோடு கரிப்பூர் சர்வதேச விமான நிலை யத்தில் தரையிறங்கிய வேளை விபத்தில் சிக்கியது.

இதில் விமானம் இரண் டாக உடைந்தது. இந்த விபத்தில் 2 விமானிகள் உள்பட 20 பேர் உயிரிழந் தனர். காயமடைந்த நூற்றுக்கும் மேற்பட் டோர் மருத்துவமனை களில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பி டத்தக்கது. (ரி3)

# கொரோனா 2841

கொழும்பு, ஓக.9

இலங்கையில் கொரோனாத் தொற் றுக்குள்ளான மேலும் இருவர் அடை யாளம் காணப்பட்டுள்ளனர். சவூதி அரேபியாவிலிருந்து இலங்கைக்கு வந்த இருவருக்கே கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண் ணிக்கை 2841 ஆக அதிகரித்துள்ளது. தொற்றுக்குள்ளான 252 பேர் வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்று வருவ துடன் 2576 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதேவேளை 11 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3)

# ரூபா 450 பில்லியன் பெறுமதியான நாணயத்தாள்களை அச்சிட்டது மத்திய வங்கி

கொழும்பு, ஓக.9




இலங்கை மத்திய வங்கி கடந்த பெப்ரவரி கடைசி வாரம்வரை 450 பில்லியன் ரூபாக்கும் அதிகமான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளது, இதில் 164.9 பில்லியன் ரூபா மார்சி லும் 92.5 பில்லியன் ரூபா ஏப்ரலி லும் புழக்கத்துக்கு விடப்பட்டுள் ளன. எனினும் இந்தச் செயற்பாடு விரைவான அபிவிருத்தியையோ அல்லது பணவீக்கத்தையோ ஏற்படுத் தவில்லை என்று மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வழமையாக இலங்கை மத்திய வங்கி, தம்மிடம் உள்ள நாணய ஒதுக்கத்தின் அடிப்படையிலேயே நாணயத் தாள்களை அச்சிடும். எனினும் இந்த ஒதுக்கம் கடந்த ஆண்டு ஜூலை கடைசி வாரத்தில் 996.5பில்லியன் ரூபாவில் இருந்து 868 பில்லியன்க ளாக குறைந்தது. இது ஒரு வருடத் துக்கு முன்னுள்ள ஒதுக்கமான 874.5 பில்லியன் ரூபாவை விடக் குறைவா னதாகும். வணிக வங்கிகள் மத்திய வங்கியில் வைப்பிலிட்ட தொகை யில் குறைவு ஏற்பட்டமை காரணமா கவே மத்திய வங்கியின் நாணய ஒதுக்கம் குறைந்தது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ரி1)

# தமிழ்க்கட்சிகளுக்கு தூரநோக்கு அவசியம்

## சுட்டிக்காட்டுகின்றது உலகத்தமிழர் பேரவை

கொழும்பு, ஓக. 9

தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, கல்வி மற்றும் கலாசார அபிலாஷைகளை கொள்கை ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் விரிவாகக் கவனிக்க வேண்டிய நீண்டகாலப் பார்வை மற்றும் செயற்றிட்டம் தமிழ்க்கட்சிகளுக்கு அவசியம் என பிரிட்டனைத் தளமாகக் கொண்ட உலகத்தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் மிகுந்த புகழ் பெற்ற அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி. இந்த நிலையில் தமிழ் மற்றும் பிற சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்வது உட்பட்ட பிரச்சினைகளுக்கு அவர் தீர்வைக் காணவேண்டும்.

தற்போது அவரது அரசின் அதிகாரம் பெரும்பான்மை உச்சத்தில் இருக்கும்போது, ‘அனைத்து குடிமக்களுக்கும் பயன்தரு நடவடிக்கைகளை மேற்கொள்ள இது ஒரு பொன்னான வாய்ப்பாகும். யுத்தம் முடிவடைந்து பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் அரசியல் தளம் மாறி வருகிறது.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் 2015 இல் 16 ஆக இருந்தபோதும், தற்போது 10 ஆகக் குறைந்துள்ளது. எனினும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் தமிழ்த் தேசிய நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல் கட்சியாக அது இருந்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரம் இரண்டு முனைகளில் தெளிவாக அழிந்துவிட்டது.

தென்னிலங்கைக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கம் அதிகார அமைப்பில் அந்த கட்சி முழுமையாகப் பங்கேற்ற போதிலும், வாக்காளர்களின் எதிர்பார்ப்பை வழங்கவில்லை. இந்நிலையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை விரிவாகக் கவனிக்க வேண்டிய நீண்ட காலப் பார்வை மற்றும் செயல் திட்டம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளுக்கு மிக அவசியம். என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி3)

# தேர்தலுக்குப் பின்னர் வன்முறை பதிவாகவில்லை

கொழும்பு, ஓக. 9

பொதுத்தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் எந்த வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை என தேர்தல்கள் விவகாரத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இக்காலப்பகுதியில் 5 சிறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளன. அவை தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் பொதுத்தேர்தலின் பின்னரான காலப்பகுதி சுமுக நிலையில் நகர்கின்றது. வாக்களிப்பு தினத்தன்றும், வாக்களிப்புத் தினத்துக்கு முன்னரும் பதிவான தேர்தல்கள் வன்முறை மற்றும் சட்ட மீறல்கள் குறித்த மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அந்தந்த பொலிஸ் வலயங்கள் ஊடாக இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் குறித்த சம்பவங்களை மையப்படுத்தி ஆலோசனை கோர தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார்.

இதேவேளை தேர்தலுக்கு முன்னர், இடம்பெற்ற சட்ட மீறல்கள் தொடர்பில் 480 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றிருந்த நிலையில் 561 பேர் அது தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் 165 வாகனங்கள் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)




# சுற்றுலாவிகளுக்காக மீண்டும் சேவையில் கட்டுநாயக்க

கொழும்பு, ஓக. 9

சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையம் மீண்டும் திறக்கப்படவுள்ளது. புதிய அமைச்சரவை நியமனத்தின் பின்னரே இந்த விமான நிலையம் மீண்டும் திறக்கப்படவுள்ளது என விமான சேவை நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரியராய்ச்சி தெரிவித்துள்ளார்.

விமான நிலையம் திறக்கப்பட்டாலும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை வழமை போன்று முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் தனிமைப்படுத்தல் காலம் தொடர்பில், சுகாதாரப் பிரிவு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை, ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் நாளை

கொழும்பு, ஓக. 9

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும், தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி, வாயிலாக 20 நாள்களுக்கு ‘இலங்கையில் தமிழும் தமிழரும்’ என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பதினோராவது நாளாகிய நாளை திங்கட்கிழமை, மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் அனுசியா சத்தியசீலன் “இலங்கையில் தமிழ்வழிக் கல்வியும் பாடநூல்களும்” என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச் சொல்லைப் பயன்படுத்தி கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996 - pass word : wts

# மோட்டார் சைக்கிள் திருட்டு

வவுனியா, ஓக. 9

வவுனியா கற்குளி பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்று திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று மாலை பகல்வேளையில் வீடொன்றிற்கு முன்னால் வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த என்.பி.ஏச்.ஐ.16704 இலக்க மோட்டார் சைக்கிள் ஒன்றே இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் கவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ரி3-110)

# நிராகரிக்கப்பட்ட வாக்குகள்; காரணிகளைப் பட்டியல் படுத்தியது தேர்தல் வன்முறைக் கண்காணிப்பகம்

கொழும்பு, ஓக. 9

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகள் நிராகரிக்கப்பட்டமைக்கு, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் நான்கு காரணிகளைத் தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் தேர்தல் அறிவு, முறையாக வாக்களித்திருக்காமை, தவறான தெரிவுகள் என்பவற்றோடு ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்ட பிளவின் காரணமாகப் பெரும்பாலான ஐ.தே.க. ஆதரவாளர்கள் வாக்களிப்பைத் தவிர்த்திருந்தமை ஆகியனவே அதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 7 இலட்சத்து 44 ஆயிரத்து 373 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இது நூற்றுக்கு 4.58 சதவீதமாகக் காணப்பட்டாலும் கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது மிக அதிகளவான எண்ணிக்கையாகும்.

இம்முறை தேர்தலில், 2019 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய ஒரு கோடி 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர். இதில் ஒரு கோடி 23 இலட்சத்து 43 ஆயிரத்து 302 பேர் வாக்களித்துள்ளனர்.

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் ஒரு கோடி 15 இலட்சத்து 98 ஆயிரத்து 929 வாக்குகள் செல்லுபடியானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# அமைச்சுக்கள் முறைப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

*நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு*

கொழும்பு, ஒக.9

நல்லாட்சி அரசாங்கம் பகிர்ந்தளித்தது போன்று அல்லாமல், சரியான முறைப்படி அமைச்சுக்களும் விடயங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஹம்பாந்தோட்டையில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள நிலையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக எம்முடன் இருந்த 53 பேருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அமைச்சுப் பதவிகளை நான் பெறுவதற்கு முன்னர், எனது தந்தைக்காக



முன்நின்றவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக எம்முடன் 53 பேர் இருந்தனர். அமைச்சுப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்புகள் இருந்தும் பணத்திற்கு அடிபணியாமல், வீதியில் இறங்கி, மஹிந்தவுடன் 53 பேர் செயற்பட்டனர். அவர்களுக்கு நியாயம் கிடைத்தன் பின்னர் தலைவர்களுடன் என்னால் பேச முடியும்.

மாவட்டத்தை அடிப்படையாக கொண்டல்லாமல் கொள்கைகளை அடிப்படையாக வைத்தே அமைச்சுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நல்லாட்சி அரசாங்கம் பகிர்ந்தளித்தது போன்று அல்லாமல் சரியான முறைப்படி அமைச்சுக்களும் விடயங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். செழிப்பான எதிர்காலத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமானவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஸ, அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிட்டுள்ளார். (ரி1)

## குளவிக் கொட்டு; ஒருவர் படுகாயம்

திருகோணமலை, ஒக.9

வயலுக்கு சென்ற நபரொருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் திருகோணமலை, மஹதிவுல்வெவ பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்கான நபர் கோமரங்கடவல கல்யாணபுரம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய டி. நிலவீர எனத் தெரிய வருகிறது. குறித்த நபர் வழமை போன்று நேற்று வயலுக்குச் சென்றபோது குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதனையடுத்து, அவரை அயலவர்கள் மீட்டு மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இதனையடுத்து குறித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி2)

## பிரியாவிடை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக.9

உடுவில் பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றி, கொழும்பு மனித வள வேலைவாய்ப்புத் திணைக்களத்துக்குப் பிரதம கணக்காளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் அரசரட்ணம் மோகன்ராஜீக்கு உடுவில் பிரதேச உத்தியோகத்தர்களால் பிரியாவிடை நிகழ்வு பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இவ்விழாவில் உதவிப் பிரதேச செயலர், திட்டமிடல் பணிப்பாளர். கிராம அலுவலர்கள், நிர்வாக அலுவலர், நிர்வாக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கணக்காளர் சேவை தரம் 1 இற்கு கடந்த 5 வருடத்திற்கு முன்னர் பதவியுயர்வு பெற்ற மோகன்ராஜ் கணக்காளர் சேவையில் 20 வருடங்கள் பணியாற்றி, தற்போது மனிதவள வேலை வாய்ப்பு பணியகத்திற்கு பதவியுயர்வு பெற்றுச்செல்வதுடன் எதிர்வரும் 12ம் திகதி புதன்கிழமை தனது கடமைகளைப் பெறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3-39)

## ஐ.தே.க.வின் தேசியப்பட்டியலை நிராகரித்த ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஒக.9

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்து வத்துக்கு தம்மை நியமிக்க மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

எனினும் தாம் பொதுவாழ்க் கையிலிருந்து ஒட்டுமொத்தமாக ஓய்வு பெறப்போவதாக இந்த அறிவிப்பு அமையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், தேசியப்பட்டியலுக்கு எவரை சிபார்சு செய்வது என்பது தொடர்பில் கட்சி தொடர்ந்தும் ஆராய்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை



தோல்வியடையச் செய்த ஐக்கிய மக்கள் சக்தியுடனான பேச்சுவார்த்தை வாய்ப்புக்களையும் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி வேறு ஒரு கட்சி என்பதை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளதாக ரணில் தெரிவித்திருக்கிறார். (ரி2)

## மாட்டுடன் மோதி தாயும், மகனும் படுகாயம்

மதவாச்சி, ஒக.9

மதவாச்சி பகுதியில் மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த தாயும், மகனும் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றிரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பன் குளத்திலிருந்து கந்தளாய் நோக்கி மரண வீடு ஒன்றுக்கு தாயும், மகனும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது குறுக்கே வந்த எருமை மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. இந்த விபத்தில் தாயும், மகனும் படுகாயங்களுக்கு இலக்கான நிலையில் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரி1)

## இந்தியாவிலிருந்து 123 பேர் நாட்டை வந்தடைந்தனர்

கொழும்பு, ஒக.9

கொரோனாப் பரவல் காரணமாக இந்தியாவின் விசாகப்பட்டனத்தில் சிக்கியிருந்த மேலும் 123 பேர் இன்று மத்தல சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். இதேவேளை, மாலைதீவில் சிக்கியிருந்த மேலும் 163 பேர் இன்று மத்தல விமான நிலையத்தின் ஊடாக ஸ்ரீ லங்கன் விமான நிலையத்திற்கு சொந்தமான விசேட விமானத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தனர். இவ்வாறு வருகை தந்த குழுவினரை பீ.சி.ஆர் பரிசோதனைக்காக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பி.சி.ஆர் பரிசோதனையைத் தொடர்ந்து அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (ரி1)

## 420 பேர் கொண்ட குழுவினர் இலங்கை வருகை

கொழும்பு, ஒக.9

கொரோனாத் தொற்று காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு திரும்ப முடியாமல் இருந்த மேலும் 420 இலங்கையர்கள் இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தடைந்தனர்.

கட்டாரிலிருந்து 43 பேர் இலங்கை வந்திருந்த நிலையில் இதில் 27 பேர் இலங்கையர்களாவர். ஏனைய 16 பேரும் கட்டாரில் இருந்து இலங்கை வந்த தூதரக அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சீனாவில் சிக்கியிருந்த மேலும் 112 பேரும் இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாடு திரும்பியிருந்தமை



குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் வருகை தந்திருந்த இவர்கள் தற்போது பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, இவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி2)

# புதிய உத்வேகத்துடன் சிறந்த அரசியலை முன்னெடுப்பேன்

## ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக.9

புதிய உத்வேகத்துடனும் புதிய எதிர் பார்ப்புடனும் மிகச் சிறந்த அரசியலை முன்னெடுத்துச் செல்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் காலங்களில் முதலில் கட்சியை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்ப டும். பின்னர் கட்சிகளுக்குள்ளேயே விருப்பு வாக்குகளுக்கு போட்டி ஏற்படும். இந்நிலைமை சகல கட்சிகளுக்குள்ளும் இருக்கும் நிலையாகும். இது விருப்பு வாக்கு முறையில் உள்ள குறைபாடாகும். இதனால் ஏற்றத்தாழ்வுகள், விருப்பு வெறுப்புகள் ஏற்படும். எனவே போட்டிகள் வருமென்பது இயல்பானது.

தேர்தலில் நானும் மனோ கணேசனும் இணைந்து பயணிக்கவே நினைத்திருந்தோம். பின்னர் தனித்தனியே செல்லும்போது வாக்குகளை அதிகம் பெற்றுக்கொள்ள முடியுமென மனோ கணேசன் கூறியதால் தனியே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனவே தனிப்பயணம் எங்களுக்கிடையிலான பிரச்சினை என்று கூறமுடியாது. இன்று என்னோடு பலர் இணைந்து பயணிக்கத் தயாராக இருக்கின்றார்கள். அது தனிப்பட்ட பயணமா அல்லது அங்கம் வகிக்கும் கட்சியுடனான பயணமா என்பது தொடர்பில் சிந்திக்க இன்னமும் காலம் தேவை.

மனோ கணேசனுடன் இவ்விடயம் தொடர்பாக தெளிவாக பேசத் தீர்மானித்திருக்கின்றேன். அதன் பின்னரே அது தொடர்பில் முடிவுகள் எடுக்கப்படும். ஆனால் நிச்சயமாக என்னுடைய அரசியல் பயணம் காத்திரமானதாக அமையும். புதிய உத்வேகத்துடன் புதிய எதிர்பார்ப்புடன் நல்லதொரு அரசியலை முன்னெடுப்பேன். என்னுடைய அரசியலில் பிரதேசவாதம் இருக்காது. எனது அரசியல் பயணம் கொழும்பை தலைமையாகக் கொண்டு நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும்- என்றார். (ரி3)





## கொரோனா பரிசோதனை இயந்திரம் அன்பளிப்பு

சுவிஸ் தாய்நிலம் அறக்கட்டளையினரால் மன்னார் பெரிய குஞ்சுக்குளம் சென். லூட்ஸ் மகாவித்தியாலத்திற்கு கடந்தவாரம் கொரோனா பரிசோதனை இயந்திரம் கையளிக்கப்பட்டது. இதனை சுவிஸ் தாயக அறக்கட்டளை மன்னார் இணைப்பாளர் சகாயம் என்பவர் அன்பளிப்புச் செய்தார். (ரி1-213)

## இருவேறு விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

குருநாகல், ஒக.9

வாரியபொல குருநாகல் வீதியில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வான் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதுண்டதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவத்தில், பாதெனிய பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு பொலநறுவை வீதியில் உழவு இயந்திரம் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் 24 வயதுடைய நபர் ஒருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ரி2)

# 75 மி.மீற்றருக்கு அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகலாம்

கொழும்பு, ஒக.9

சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணங்களின் பல பகுதிகளில் 75 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சப்ரகமுவ, மத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவாமாகாணத்தில் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை,திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும்காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொது மக்கள் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



## திருமலையில் வாசிகசாலைகள் திறந்து வைப்பு

திருகோணமலை, ஒக.9

வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் மத்தியில் விரிவுபடுத்தும் நோக்குடன் புல்மோட்டை ரகுமான் நகர் மற்றும் புல்மோட்டை அரபாத் நகர் பகுதிகளில், இரண்டு வாசிகசாலைகள் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டன.

குச்சவெளி பிரதேசசபையின் தவிசாளர் ஏ.முபாறக் அவர்களினால் இந்த வாசிகசாலைகள் திறந்து வைக்கப்பட்டன. (ரி2)

# கொள்ளையடித்த தங்க மாலையை விழுங்கிய நபருக்கு விளக்கமறியல்

ஹட்டன், ஒக.9

தங்க மாலை ஒன்றை கொள்ளையடித்து அதை விழுங்கிய சந்தேகநபர் ஒருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் ஹட்டன் பௌத்த சங்கத்திற்கு செல்லும் வழியில் ஒரு பெண்ணின் தங்க மாலையை வழிப்பறி செய்து கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

பின்னர் கொள்ளையிடப்பட்ட நகை கொள்வனவு செய்யப்பட்ட நிலையத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு சந்தேகநபரைக் கைதுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அவரை சிங்கமலை புகையிரத சுரங்கப்பதை பகுதிக்கு செல்லும் வழியில் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர் தன்னிடம் இருந்த தங்க மாலையை விழுங்கியுள்ளார். இதனையடுத்து அவர் டிக்கோயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்ரே பரிசோதனையில் அவர் தங்க மாலையை விழுங்கிய விடயம் தெரியவந்துள்ளது.

பின்னர் சந்தேகநபரை நீதவான் தமயந்தி பெர்னான்டோ முன்னிலையில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து, சந்தேக நபர் விழுங்கிய மாலையை சிறை மருத்துவரைக் கொண்டு வெளியே எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதனைத் தொடர்ந்து மீண்டும் சந்தேக நபரை நீதி மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தவிட்டுள்ளார். (ரி1)

# 100 பேருந்துகள் விசேட சேவையில்

கொழும்பு, ஒக.9

பொதுத்தேர்தலை முன்னிட்டு கொழும்பில் இருந்த பலர் தங்களது சொந்த இடங்களுக்குச் சென்றிருந்தனர். இவ்வாறு சென்றிருந்தோர் மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்காக விசேட போக்குவரத்து சேவை இன்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது, இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது. மேலும், இந்த விசேட போக்குவரத்து சேவைக்காக 100 பேருந்துகளை ஈடுபடுத்தியுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் ப.ா. பண்டுக சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு, மேலதிகமாக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையினால் பயணிகள் சிரமமின்றி பயணிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரி2)

தரையிறங்கும்போது பயங்கர விபத்து;

# 35 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் இரண்டாக பிளந்தது விமானம்

## இரு விமானிகள் உட்பட 20 பேர் சாவு





கொச்சி,ஓக.9
இந்தியாவின் கேரளா மாநிலம் கோழிக்கோடு கரிப்பூர் விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானம் ஒன்று ஓடுதளத்தில் இருந்து விலகி விபத்துக்குள்ளானது. இதில் இரு விமானிகள் உட்பட 20 பேர் உயிரிழந்துள்ளனர்.
டுபாயில் இருந்து கேரள மாநிலம் கோழிக்கோடு கரிப்பூர் விமான நிலையத்திற்கு பயணித்த ஏர் இந்தியாவின் ஐ.எக்ஸ்.1344 என்ற விமானமே நேற்றுமுன்தினம் இரவு விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் 185 பயணிகள் மற்றும் 6 விமான பணிக்குழுவினர் என மொத்தம் 191 பேர் பயணித்துள்ளனர்.
விபத்து தொடர்பில் தெரியவருவதாவது: விமான நிலையத்தை நெருங்கியதும், விமானத்தை தரை இறக்குவதற்கான முயற்சியை விமானிகள் மேற்கொண்டனர். அதன்போது பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. விமானம் ஓடுபாதையில் தரை இறங்கிய போது, எதிர்பாராத விதமாக விபத்தில் சிக்கியது. ஓடுபாதையில் சறுக்கிக்கொண்டு வேகமாக ஓடிய விமானம், விமானியின் கட்டுப்பாட்டை இழந்து ஓடுபாதையை தாண்டிச் சென்று அருகில் உள்ள 35 அடி பள்ளத்தில் விழுந்தது. பள்ளத்தில் விழுந்த விமானம் பயங்கர சத்தத்துடன் இரண்டாக உடைந்தது. விமானி அறையில் இருந்து முன்பக்க கதவு உள்ள பகுதி வரை உடைந்து பள்ளத்தில் விழுந்தது. இதையடுத்து விமான விபத்தில் சிக்கியிருந்த அனைவரையும் மீட்ட படையினர் அவர்களை அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.






வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் இது வரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் விமானி, துணை விமானியும் உள்ளடங்குகின்றனர். கொரோனாப் பாதிப்பின் காரணமாக டுபாயில் சிக்கியிருந்த இந்தியர்களை மீட்டு வந்த விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

பெய்ரூட் வெடி விபத்து;

# சுதந்திர விசாரணைக்கு அழைப்பு விடுத்தது ஐ.நா.

நியூயோர்க், ஓக.9
பெய்ரூட் வெடி விபத்து விவகாரத்தை சுதந்திர விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது.
இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளதாவது:
லெபனான் தற்போது இரு பெரும் சமூக பொருளாதாரத் துயரங்களைச் சந்தித்துள்ளது. ஒன்று கொரோனா வைரஸ் மற்றொன்று பெய்ரூட் வெடி விபத்து.
அரசியல் குறைகளைத் தவிர்த்து மக்களின் நலனுக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். பெய்ரூட் வெடி விபத்து தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (ரி1)

# பிரபல நடிகரின் திருமணத்தில் பங்கேற்ற சிலருக்கு கொரோனா?



தெலுங்கு நடிகர் நிதினின் திருமணம் ஐதராபாத்தில் கடந்த ஜூலை 26 ஆம் திகதி நடைபெற்றது. இந்த திருமண விழாவில் இரு வீட்டாரின் குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

இந்நிலையில், நிதினின் திருமணத்தில் கலந்து கொண்ட சிலருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதியாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் நிதின்ஷாலினி தம்பதியினர் உள்பட அந்த திருமணத்தில் கலந்துகொண்டவர்கள் கொரோனா பரிசோதனை மேற்கொண்டு வருகிறார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

# தண்ணீர் கொரோனாவை கொல்லுமா?



சாதாரண தண்ணீரே கொரோனா வைரஸை கொல்லும் திறன் வாய்ந்தது என்று அண்மையில் ரஷ்யாவின் சைபீரியாவிலுள்ள, 'வெக்டார்' கிருமி ஆய்வு மையத்தின் ஆராய்ச்சியாளர்கள், அறிவித்துள்ளனர்.

வெக்டார் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட விரிவான ஆய்வின் படி, அறை வெப்பத்தில் இருக்கும் தண்ணீரில் கொரோனா கிருமிகளை இட்டால், அவற்றில், 90 சதவீதம், 24 மணி நேரத்தில் கொல்லப்பட்டன.

அதே தண்ணீரில், 72 மணி நேரத்தில் 99.9 சதவீதம் கொரோனா வைரஸ்கள் பலியாகி விட்டன.

கொதிக்க வைத்த நீரில் கொரோனாவில் ஒன்று கூட தப்பிக்காமல் உடனடியாக செத்து மடிந்தன. அதேபோல குளோரின் கலந்த நீரிலும் கொரோனாவால் ஒரு நொடி கூட உயிருடன் இருக்க முடியாது என ரஷ்ய விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிகளில் கண்டுபிடித்துள்ளனர்.

# மேஹனின் அடுத்த முடிவு



பிரிட்டன் ராணி எலிசபெத்துக்கு, அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்து கலங்க வைக்கிறார், அவரது இளைய பேரன்.

ஹாரியின் மனைவி, மேஹன் மார்கல், 'அரச குடும்ப வாழ்க்கையே வேண்டாம். அமைதியான வாழ்க்கையே போதும்...' என்றதால், சமீபத்தில் ஒட்டம் பிடித்தனர், ஹாரியும், மேஹனும்.

இந்த அதிர்ச்சியிலிருந்து அரச குடும்பம் மீள்வதற்குள், அடுத்த அணு குண்டை வீசியுள்ளார், மேஹன்.

அண்மைக்காலமாக, அமெரிக்காவில், கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள் மீது, கொடூரமான தாக்குதல்கள் நடக்கின்றன. இதை கண்டித்து, அமெரிக்கா மட்டுமல்லாமல், ஐரோப்பிய நாடுகளிலும் போராட்டங்கள் நடக்கின்றன.

'இந்த நவீன காலத்திலும், இனவெறி நடப்பதை சகிக்க முடிய வில்லை. அமெரிக்காவுக்குச் சென்று, கறுப்பின மக்களுடன் சேர்ந்து, வீதியில் அமர்ந்து போராடப் போகிறேன்...' என்கிறார், மேஹன்.

ராணி எலிசபெத்தோ, 'அரச குடும்பத்துக்கு, இந்த பொண்ணு, கெட்ட பெயர் ஏற்படுத்தி விடும் போலிருக்கிறதே...' என, புலம்புகிறார்.

# ரி-20 உலகக் கிண்ண தொடர் அடுத்தாண்டே!

## ஐ.சி.சி அறிவிப்பு

புதுடில்லி, ஒக.9
இந்தியாவில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெறும் என்று ஐ.சி.சி அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.
இதனையடுத்து இவ்வாண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற விருந்த ரி-20 உலகக் கிண்ணம் 2022 ஆம் ஆண்டுக்கு நடத்தப் படவுள்ளது எனவும் ஐ.சி.சி தெரி வித்துள்ளது.
ஆஸ்திரேலியாவில் இவ்வாண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை இருபது ஓவர் உலகக் கிண்ணம் நடத்தத் திட்டமிடப்பட்டி ருந்தது.
இந்நிலையில், கொரோனா பரவல் காரணமாக அது ரத்து செய்யப்பட்டது. இதனைய டுத்து அந்த நாள்களை பயன் படுத்தி பி.சி.சி.ஐ, ஐ.பி.எல் ரி-20 போட்டிகளை செப் ரெம்பர் 19 முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதனையடுத்து, ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் நிலை கேள்விக்குறியானது. இந்தநி லையில் ரி-20 உலகக் கிண் ணத் தொடர் 2021ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என ஐ.சி.சி அறிவித்துள்ளது.
மேலும், இந்தாண்டு இரத்தான ரி-20 உலகக் கிண்ணத் தொடர் ஆஸ்திரேலியாவில் 2022 ஆம் ஆண்டு நடைபெறும் என்று அதிகார பூர்வமாக தெரிவித் துள்ளது ஐ.சி.சி. (ரி2)

# வீவோ நிறுவனத்துடனான ஐ.பி.எல்.ஒப்பந்தம் ரத்து!

புதுடில்லி, ஒக.9
சீனாவின் வீவோ நிறுவனத்துடனான ஐ.பி.எல். விளம்பர ஒப்பந்தத்தை பி.சி.சி.ஐ இரத்து செய்துள்ளது என ஐ.பி.எல். நிர்வாகம் தெரி வித்துள்ளது.
ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பிரதான அனுசரணை யாளராக வீவோ நிறுவனம் இருந்து வந்துள் ளது. இந்திய மற்றும் சீன எல்லையான லடாக் பகுதியில் ஏற்பட்ட பிரச்சினைக்குப் பின்னர் சீனப் பொருட்களை நிராகரிக்க வேண்டும் என்று இந்தியாவில் குரல் வலுத்தது.
ஆனால், ஐ.பி.எல். அனுசரணையாளராக வீவோ நிறுவனம் தொடர்ந்து நீடிக்கும் என்று பி.சி.சி.ஐ. தெரிவித்தது. இதனால் பலரும் கொதித்து எழுந்தனர். ஐ.பி.எல் தொடரை புறக்க ணிக்க வேண்டும் என வலியுறுத்தினர். மேலும், அரசியல் சார்பிலும், அமைப்புகள் சார்பிலும் மறைமுகமாக எதிர்ப்புகள் கிளம்பின. இதனால் வீவோ பிரதான அனுசரணையில் இருந்து விலக முடிவு செய்தது. இந்தநிலையில் வீவோ மொபைல் இந்தியா பிரைவேட் நிறுவனமும், பி.சி.சி. ஐயும் இணைந்து ஐ.பி.எல் 2020 பிரதான அனுசரணையில் இருந்து வீவோ விலகிக் கொள் கிறது. 2020 தொடருக்கான பிரதான அனுச ரணை ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஐ.பி.எல். நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ரி2)



# கொரோனாவை விட காலநிலை மாற்றம் பேராபத்தாகும்

தற்போது உலகில் கொரோனாவைவிடக் காலநிலை மாற்றம் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என மைக்ரோசாப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸ் எச்சரித்துள்ளார்.

உலகம் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகக் கொரோனா தொற்று நோயுடன் போராடிக் கொண்டிருக்கிறது. மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்து வைரஸுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர். வேலை பாதுகாப் பின்மை, மன அழுத்தம் மற்றும் பிற பல்வேறு சவால்களை உலக மக்கள் எதிர்கொண்டுள்ள னர். எவ்வாறாயினும் இந்த எல்லா போராட் டங்களும் இடையில் உருவாக்கப்பட்டு வரும் தடுப்பு மருந்து நம்மை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு செல்லும் என்ற நம்பிக் கையில் அனைவரும் தங்கள் நாள்களைக் கழித்து வருகின்றனர்.

இந்நிலையில் கொரோனாவைவிடக் காலநிலை மாற்றத்தால் உருவாகும் ஆபத்து பெரிய அளவில் இருக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் மைக்ரோசாஃப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸ். இவர் பல ஆண்டுகளா கவே உலகின் காலநிலை தொடர்பான விடயத் தைப் பற்றிப் பேசி வருகிறார். இதற்கிடையில் கார்பன் டை ஒக்ஸைடு வெளியீடு குறித்துப் பேசியுள்ள அவர், "இந்த ஆண்டு உலகம் முழுவதும் விதிக்கப்பட்ட ஊரடங்கால் எவ்வளவு கார்பன் டை ஆக்ஸைடு வெளியீடு குறைந்துள்ளது என்பதை ஆய்வாளர்கள் தெரிவிக்க மறுத்துள்ளனர். ஆனால், சர்வதேச எரிசக்தி நிறுவனம் 8% குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இது ஒரு அர்த்தமுள்ள குறைப்பாகப் பார்க்கப்ப டுகிறது. மேலும், ஒவ்வோர் ஆண்டும் இந்தக் குறைவு விகிதத்தைத் தொடர முடிந்தால் நாம் சிறந்த நிலையில் இருப்போம், துரதிர்ஷ்டவசமாக நம்மால் அதைச் செய்ய முடியாது. இந்த 8% குறைப்பு காரணம் என்ன என்பதைக் கவனியுங்கள். உலகம் முழுவதும் 6 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள் ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் கார், விமானம், வாகனங்கள் போக்குவரத்து கிட்டத்தட்ட முற்றிலும் நிறுத்தப்பட்டது. கண்டிப்பாக, இந்தச் சூழலை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆனால், கார்பன் டை ஒக்ஸைடு வெளியீட் டைக் கட்டுப்படுத்த தவறினால் கொரோனா வுக்கு இணையான மற்றொரு பேரழிவை மக்கள் சந்திக்க நேரிடும்.

காலநிலை மாற்றத்தால் புவியின் வெப்பநிலை உயர்ந்து வருகிறது. இப்படியே சென்றால் இன்னும் 40 ஆண்டுகளில் அதாவது, 2060ஆம் ஆண்டில் கொரோனாவைப் போலவே அதிகள வில் மக்கள் இறக்க நேரிடலாம். மேலும், 2100 ஆவது ஆண்டில் இந்த மதிப்பு ஐந்து மடங்கு அதிகரித்திருக்கும்.

தற்போது கொரோனாவால் ஒரு லட்சத்துக்கு 14 பேர் என்ற கணத்தில் உயிரிழப்பு பாதிப்பு ஏற்படுகிறது. அதுவே காலநிலை மாற்றத்தால் அதிகபட்சம் எனில் ஒரு லட்சத்துக்கு 73 உயிரிழப்புகளும் குறைந்தபட்சமாக ஒரு லட்சத்துக்கு 10 பேர் வரை உயிரிழக்க நேரிடும். கொரோனாவை விடக் காலநிலை மாற்றம் மிக மோசமான பொருளாதார பாதிப்பை ஏற்படுத் தும். இப்போது இருக்கும் ஆபத்து பெரியது தான், அதே நேரம் நாளைய ஆபத்து குறித்தும் அந்தந்த நாடுகள் முறையாகத் திட்டமிடுவது அவசியமான ஒன்று" எனத் தெரிவித்துள்ளார்.



# வசீகர சருமம் வேண்டுமா?

- இரண்டு டீஸ்பூன் தேங்காய்ப்பாலுடன் ஒன்றி ரண்டு குங்குமப் பூவைச் சேர்த்துக் கலந்து கொள்ளவும். இதை முகம் மற்றும் கழுத்தில் தடவி, விரல்களால் கழுத்திலிருந்து மேல் நோக்கி முகத்துக்கு மசாஜ் செய்யவும். வாரம் மூன்று முறை இவ்விதம் செய்து வந்தால் பொலிவிழந்த முகம் பிரகாசிக்கும்.
- இரண்டு கரண்டி கடலைமா, அரை கரண்டி கஸ்தூரி மஞ்சள் இரண்டையும் காய்ச்சாத பாலில் சேர்த்துக் கலந்துகொள்ளவும்(வறண்ட சருமத்தி னர் காய்ச்சாத பாலுக்கு பதிலாக பால் ஆடை யைச் சேர்த்து கொள்ளலாம்). இதனை முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்துக் கழுவினால் சருமச் சுருக்கங்கள், தொய்வு நீங்கி சருமம் இறுக்கமாகும்.
- குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்த குளிர்ந்த பச்சைப் பாலில், இரண்டு வட்ட வடிவப் பஞ்சுத் துண்டுகளை நனைத்து, மூடிய இமைகளின் மேல் வைத்திருக்கவும். 10 நிமிடங்கள் கழித்துப் பஞ்சை எடுத்துவிட்டு கண்களைக் கழுவவும். இவ்வாறு தினமும் செய்துவந்தாலே போதும், கருவளையம் நீங்கி கண்கள் பிரகா சிக்கும்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 09.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.